திரு. எம். சுரேந்திரன் : சார், வரப்போகும் நிலச் சீர்திருத்தத்தில் காட்டுவழியாக உள்ள இடங்களில் விவசாயத்திற்கு ஏற்பாடு செய்து விவசாயம் செய்யும் விவசாயிகளுக்கு எல்லா வரிகளிலிருந்தும் வரிவிலக்கு அளிக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : இந்தக் கேள்வி ஒரு நிர்வாக முறையைப் பற்றியிருக்கிறது. மசோதாவோடு தொடர்பு கொண்டதல்ல.

திரு. சோ. அழகர்சாமி : ஐயா, நிலச்சீர்திருத்தத்தில் காடுகள், மேய்ச்சல் தரைகள் ஆகியவற்றிற்கு விலக்கு உண்டு என்ற காரணத்தி ஞல் பல நிலச்சுவான்தார்கள் சாகுபடிக்கு லாயக்குள்ள நிலங்களைக்கூட மேய்ச்சல் தரை, காடுகள் என்று கூறி விதிவிலக்கு பெறுகிறார்கள். அதை மாற்ற நிலச்சீர்திருத்தச் சட்டத்தில் அந்தத் திருத்தத்தை நீக்க அரசாங்கம் உத்தேசித்துள்ளதா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : அந்தமாதிரியான எல்லா அம்சங்களையும் விரிவாக ஆராய்வதற்காகவும், நல்ல பல யோசனைகளை அறிவதற்காகவும் இந்த மசோதாவைப் பற்றிய கருத்துக்களைக் கூற இந்த மன்றத்திலுள்ள அங்கத்தினர்களுக்கு முழு உரிமையும், வாய்ப்பும் இருக்கிறது. அவர்கள் கூறுகின்ற எல்லாவற்றையும் கருத்தில் கொண்டு தான் இதன் கடைசி வடிவம் அமையும்.

Nurseries

*123 *Q.*—Thiru K. VINAYAKAM: Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) whether it is a fact that Madras Forest Department has launched a scheme for establishing central nurseries where seedlings of useful trees will be raised and sold ; and

(*b*) if so, when and where they will be started ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : (அ) ஆம்.

(இ) 1966–67ல் மத்தியச் செடிப் பண்ணை ஒன்று சேலம் மாவட்டத்தில் நிறுவப்பட்டுள்ளது.

திரு. கே. விநாயகம் : சார், அப்படி நிறுவப்பட்ட மத்தியச் செடிப் பண்ணையிலே என்னென்ன செடிகள் உற்பத்தி செய்வதற்கு முயற்சிகள் எடுக்கப்பட்டன ? அதை இதுவரையில் எங்கெங்கு விநியோகம் செய்திருக்கி ருர்கள் ? அப்படிச் செய்வதால் இந்தத் துறையிலே ஏதாவது நல்ல விளைச்சல் ஏற்பட்டிருக்கிறதா ? அதன் மூலம் என்ன லாபம் எதிர் பார்க்கப்படுகிறது ?

மாண்புமிகு திரு ஏ. கோவிந்தசாமி : இந்தத் திட்டத்தின் கீழ் 6 ஏக்கர் நிலத்தில் 30 பாத்திகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. அதிலே 6,000 மண் தொட்டிகளில் பயனுள்ள செடிகள் வைக்கப்பட்டிருக்கின்றன. கரி, வேல், வேம்பு, புளி, மயில்கொன்றை போன்றவைகள் 11,000 பாத்திகளில் வைக்கப்பட்டிருக்கின்றன. பொதுமக்களுக்கு இன்னும் நாற்றுகள் விற்கப்படவில்லை.

திரு. எம். எஸ். மணி : தலைவரவர்களே, தமிழ்நாடு காடுகள் துறை துவங்கயுள்ள இத்திட்டத்தின்கீழ் அமைக்கப்பட்டுள்ள இந்தப் பண்ணையில் செடிகள் அமைப்பதற்கு இதுவரை செலவான தொகை மொத்தம் எவ்வளவு என அறியலாமா ?

1968 மார்ச் 2]

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : இந்தத் திட்டத்தின் கீழ் 1966–67ல் 1,38,600 ரூபாய் ஆனது. இந்தத் திட்டத்தை மேலும் விரிவு படுத்த வேண்டுமென்ற அடிப்படையில் இது ஆரம்பமாகச் செய்யப்பட்டிருக்கிறது. இந்தத் திட்டத்திற்கு, அதாவது இதற்கு வேணடிய செடிகள், இதற்கு வேண்டிய கருவிகள், தொட்டிகள், பூச்சி மருந்துகள் இவை போன்றவைகளுக்கு 1,22,000 ரூபாய். எஸ்டாபிலிஷ்மெண்ட் செலவுக்கு, அதாவது நிர்வாகச் செலவுக்கு இந்த Ranger, forester, tractor driver, cleaner, lorry driver, lorry cleaner, peon இவர்கள் சம்பளமாக 16,600 ரூபாய் செலவாகிறது. ஆகமொத்தமாக 1,38,600 ரூபாய் ஆகிறது.

ஹாஜி ம. மூ. பீர் முஹம்மது : ஐயா, நாட்டுமக்களுக்கும், நாட்டுக்கும் பயனுள்ள இந்த நாற்றுப்பண்ணைகளைப் போல பல்வேறு மாவட்டங்களிலும் உள்ள காடுகளில் நாற்றுப்பண்ணைகளை அமைத்து ஆங்காங்கு உள்ளவர்களுக்குப் பயன்படும் வகையில் உதவி செய்ய அரசு புதிய திட்டத்தை மேற்கொள்ளுமா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : மேலும் ஒரு மத்திய பண்ணையை மதுரை மாவட்டத்தில் அமைப்பதற்கு காட்டிலாக்கா அதிகாரி சிபாரிசு செய்துள்ளார். சேலம் மாவட்டத்திலுள்ள இந்தப் பண்ணை சிறப்பாக உருவாகுமானல் மதுரை மாவட்டத்திலும் அதை விஸ்தரிக்கத் திட்டமிருக்கிறது. இதற்கு மேலாக கிராம நலக் காடுகள் என்ற அடிப்படையில் காடுகளை விஸ்தரிக்கும் திட்டத்தின் அடிப்படையில் 20 ஏக்கருக்கு மேல் புறம்போக்காக இருக்கும் பகுதிகளில் பஞ்சாயத்து யூனியன் மூலமாக அந்தப் பகுதிகளில் காடு வளர்க்கின்ற திட்டமும் அமலாக்கப்பட்டு வருகிறது. இது நல்ல செடிகளை உற்பத்தி செய்ய வேண்டுமென்ற திட்டத்தின்கீழ் செயல்பட்டு வருகிறது. இது சரியான முறையில் நடக்க ஏற்பாடுகள் செய்து கண்காணிக்கப்படும். அங்கத்தினர் குறிப்பிடும் யோசனையை அதன்பிறகு கவனிக்கலாம்.

திரு. என். எஸ். வி. சித்தன் : பேரவைத் தலைவரவர்களே, அந்தப் பண்ணையிலே வளர்க்கப்படும் பயன் தரும் மரங்களின் விவரங்கள் தெரிவிக்கப்பட்டன. பயன்தரும் செடிகளின் கன்றுகள் வளர்க்கப்படுகின்றனவா ? அந்தப் பண்ணையின் மூலமாக புதிய ஒட்டுச் செடிகள் கண்டு பிடிக்கப்படுகின்றனவா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : இதுபற்றிய முழு விவரம் இல்லை. தனிக்கேள்வி போடவும்.

திரு. ஆர். நாகசுந்தரம் : தலைவரவர்களே, வனத்துறையில் உள்ள தரிசு நிலங்களை கூட்டுறவு முறை மூலம் விவசாயிகள் பயன்படுத்தும் திட்டத்தை அமைக்க நமது அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : அந்த நிலை இப்பொழுது இல்லை.

திரு. க. மு. ராஜகோபால் : தலைவரவர்களே, இந்தப் பண்ணை மூலம் வேம்பு, புளி போன்ற செடிகள் வளர்ப்பதாக அமைச்சரவர்கள் சொல்கிறார்கள். அப்படி வைக்கப்பட்டுள்ள மரங்கள் எந்தெந்த மண்ணுக்கு எந்தெந்த மரம் ஏற்றதோ அவ்வாறு வைக்கப்படவில்லை. அப்படி வைக்கப்பட்டுள்ள ஓரிடத்தில் சரியான மண்ணில் அதற்குத் தகுந்த முறையில் வைக்காமல் இருந்ததால் அந்த மரங்கள் முளைக்கக்கூடவில்லை. தண்ணீரும் ஊற்றவில்லை. இனிமேலாவது மண்ணுக்கு ஏற்ற மரங்களை வைக்கவும், தண்ணீர் ஊற்றிப் பாதுகாக்கவும் வழிவகை செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : இம்மாதிரி புகார்கள் வந்து கொண்டிருக்கின்றன. சில இடங்களில் செடிகள் நடுவதில் கண்காணிப்பு இல்லாததால் நட்ட செடிகள் முளைக்காத சூழ்நிலை இருக்கிறது. வன மகோற்சவமும் அந்த நிலையில் உள்ளதை நண்பர்கள் அறிந்திருப்பார்கள். இதை ஒழுங்காகச் செயல்படுத்தி கண்காணிப்பதற்கும், குறைபாடுகளை நிவர்த்திப்பதற்கும் ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன.

திரு. எஸ். அக்கினிராஜு : தலைவரவர்களே, இப்படிப்பட்ட விதைப் பண்ணைகளில, செடிப்பண்ணைகளில் விவசாயிகளுக்குத் தேவைப்படும் " க்ளிரிசீடியா, ஸெஸ்பேனியா " போன்ற செடிகளை வளர்த்துக் கொடுப்ப தற்குத் திட்டம் இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : போதுமான தண்ணீர் இல்லாததால் அதை அமல் நடத்துவது கஷ்டம்.

அரிசன கூட்டுப் பட்டாதார்கள்

*124 வினா.—திரு. வி. கே. கோதண்டராமன் : மாண்புமிகு தாழ்த்தப் பட்டோர் நல செய்தித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினா விற்கு விடையளிப்பாரா—

ஹரிஜன மக்களுக்குக் கொடுக்கப்படும் பலவிதமான மானியப் பணத்தை ஜாயின்ட் பட்டா இருப்பவர்களுக்கு கொடுக்காததன் காரணம் என்ன ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : அரிசன நல இலாகாவினரால் அரிசன மக்களுக்குக் கொடுக்கப்படும் பலவிதமான மானியப் பணம் ஜாயின்ட் பட்டா இருப்பவர்களுக்கும் கொடுக்கப்பட்டு வருகிறது.

திரு. கரு. சிமைச்சாமி : சார், கூட்டுப்பட்டா இருப்பவர்களுக்கும் கொடுப் பதாக அமைச்சரவர்கள் சொல்கிறார்கள். ஆனால் அதுமாதிரி கொடுக்கப் படுவதில்லை. சில இடங்களில் அவ்வாறு கிடைப்பது குதிரைக் கொம்பாக இருக்கிறது. ஆனால் அமைச்சரவர்கள் இங்கு கிடைப்பதாகச் சொல்லி விட்டார்கள். ஆனால் அங்கு கிடைப்பது கஷ்டமாக இருக்கிறது. ஆகையால் இது சம்பந்தமாக நல்லதொரு உத்தரவை கலெக்டர்களுக்குத் தெரி வித்து அதற்கு வேண்டியதைச் செய்ய அரசு முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : கூட்டுப்பட்டாக் களுக்கு வேறு உரிமையாளர்களும் ஒப்புதல் தர வேண்டும். தரவில்லை யென்றால் சிக்கல் ஏற்பட்டிருக்கலாம். ஆனால் கொடுக்க வேண்டுமென்று சட்டம் இருக்கிறது. சிக்கல்களைப்பற்றி சர்க்கார் கவனத்திற்குக் கொண்டு வந்தால் விரைவில் நீக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு கே. சகாதேவ கவுண்டர் : மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, இந்தக் கூட்டு பட்டாதாரர்களுக்கு சர்க்காரால் வழங்கப்படுகிற மானியங்களை யும் கடன்களையும் பெறுவதற்கு மிகவும் சிரமப்பட வேண்டி இருக்கிறது. கூட்டுப் பட்டாதாரர்கள் ஒருவருக்கொருவர் சம்மதம் கொடுக்க மறுக்கிறார் கள். அதோடு மட்டுமல்ல, ஒரு கிராமத்தில் 100க்கு 90 பங்கு கூட்டுப் பட்டாக்களாக இருக்கின்றன. எல்லோரும் ஒன்று சேர்ந்து கூட்டுப் பட்டாதாரர்கள் ஆகி விடுகிறார்கள். அவைகளை அரசாங்கம் கவனித்து நடவடிக்கை எடுத்து, கூடுமான வரையில் இந்தக் கூட்டு பட்டாக்களை தாலுகா ஆபீஸ்கள்மூலம் தனிப் பட்டாவாக்க அரசாங்கம் உத்தரவு பிறப்பிக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : இப்பொழுது கூட்டுப் பட்டா இருப்பதை பலர் வரவேற்கிறார்கள். உறுப்பினர்கள் சொன்னதைக் குறித்து சர்க்கார் நடவடிக்கை எடுத்து, பரிசீலனை செய்யும்.

திருமதி கே. பி. ஜானகியம்மாள் : தலைவர் அவர்களே, கிராமப் பகுதிகளில் கூட்டுப் பட்டாவை தனிப் பட்டாவாக மாற்ற வேண்டுமென்று பல வருடங்களாக ஜமாபந்தியில் கூட மனு கொடுத்தும் அது கவனிக்கப் படாமல் இருக்கிறது. கூட்டுப் பட்டாவிலிருந்து தனிப் பட்டாவாக மாற்ற வேண்டுமென்று கேட்டால் அதற்கு அனுமதி வாங்குவதற்கு மிகவும் சிரமமாக இருக்கிறது. ஆகவே, ஒரு திட்டவட்டமான நடவடிக்கைகளை